Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 3 ம் நாள் லபர் 5 (16-6-64) செவ்வாய்க்கிழமை இதழ் 128

ஈழநாடு

சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

	வாரப்பதிப்பு உட்பட	வாரப்பதிப்பு மட்டும்
1 வருடம்	48-00	13-00
6 மாதம்	25-00	6-50
3 மாதம்	13-00	3-25

நிதிமந்திரி-நாகநாதன் சந்திப்பு

தமிழர்கள் விஷயத்தில் அக்கறைகாட்ட மந்திரி உறுதி

கொள்ளுப்பிட்டி, திங்கள்

நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவை நல்லூர் எம். பி.யும் தமிழரசுக்கட்சி அங்கத்தவருமான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் இன்று சந்தித்து தமிழர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை எடுத்துக்கூறி இவற்றுக்குப் பரிகாரம் தேடும் வகையில் நிதிமந்திரி நடவடிக்கை எடுக்குமாறு கோட்டுக்கொண்டபோது அவர் தம்மால் செய்யக்கூடிய அளவு உதவி செய்வதாக உறுதியளித்ததாக அறியப்படுகிறது.

டாக்டர் நாகநாதனுடன் திரு. எம். திருச்செல்வம் கியு. ஸி.யும் சென்றிருந்தார்.

மொழிப்பிரச்னை காரணமாக தமிழர்கள் மிக்க கஷ்டமடைந்து வருகிறார்களென நிதிமந்திரிக்கு எடுத்துக் கூறப்பட்டது.

மொழி காரணமாக அரசாங்கசேவையிலுள்ள தமிழர்கள் கட்டாய ஓய்வு பெறுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்களென்றும் சம்பள உயர்வு பெற முடியாதவாறு தடை செய்யப்படுகிறார்களென்றும் டாக்டர் நாகநாதன் நிதிமந்திரிக்கு சுட்டிக்காட்டி சிறுபான்மையினத்தவரின் நலன் குறித்து உழைக்கும் நோக்கம் கொண்டுள்ள நிதிமந்திரி தமது அதிகாரத்தை இதுவிஷயத்தில் பயன்படுத்தி இவ்வித கஷ்ட நிலையைப் போக்கத் தக்கநடவடிக்கைமேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

நிதிமந்திரி டாக்டர் பெரேரா இதற்குச் சுருக்கமாகப் பதிலளிக்கையில் மற்ற மந்திரிகளுடன் இதுவிஷயமாகக் கலந்தாலோசித்துத் தாம் தம்மால் செய்யக்கூடிய அளவுக்கு உதவுவதாக உறுதி தெரிவித்தார்.

நிதிமந்திரியைச் சந்தித்த நல்லூர் எம். பி.யும், திரு. திருச்செல்வமும் தாம் இது பற்றிப் பிரதமருக்கும் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவித்தார்கள்.

100 ரூபா நோட்டுகள் செல்லும்

கொள்ளுப்பிட்டி, திங்கள்

100 ரூபா நோட்டுகள் செல்லாதென ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வெளியான செய்தி ஆதாரமற்றதும், பொய்யானதுமென மத்திய வங்கி மறுத்துள்ளது. இந்த நோட்டுகள் செல்லுமெனவும் மத்திய வங்கி அறிவித்தல் செய்துள்ளது.

சீனாவின் தாராளம்

கொழும்பு, திங்கள்

வெள்ள நிவாரணத்துக்கென இலங்கைக்கு வழங்கியுள்ள 5 கோடி ரூபா கடனை வட்டியில்லாத கடனாக சீனா மாற்றியுள்ளது. இதன்படி இலங்கை அரசாங்கம் கடன் வழங்கிய நாளிலிருந்து இதுவரை கொடுத்த வட்டி, பெற்ற கடன் தொகையில் கொடுக்கப்பட்ட ஒரு பகுதியாகக் கணிக்கப்படவிருக்கிறது. சீனாவின் இவ்வித தீர்மானம் குறித்து நிதிமத்திரி டாக்டர் என். எம். பெரேரா சீனப் பிரதமர் திரு. சூ-என் லாய்க்கு நன்றி தெரிவித்துள்ளார். இலங்கை, சீனா ஆகிய இரு நாடுகளின் நல்லுறவுக்கு இது ஓர் ஒப்பற்ற உதாரணம் என நிதிமந்திரி பெரேரா எடுத்துக் கூறியுள்ளார்

ஆர். எஸ். பெல்பொல புதிய தபால்-தந்தி மந்திரி

பாரத—பாக் உறவு

சாஸ்திரி விருப்பம்

புதுடில்லி, ஜூன், 5

பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நட்புறவை வளர்ப்பதில் தாம் மிக்க விருப்பம்கொண்டுள்ளதாக பாரதப் பிரதமர் திரு. சாஸ்திரி பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு. சாஸ்திரி பாரதப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து அயூப்கான் அனுப்பியிருந்தவாழ்த்துச்செய்திக்கு திரு. சாஸ்திரி தாம் அனுப்பியுள்ள பதிலில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையில் நட்புறவு வளர்வதைத் தாம் பரிவுணர்ச்சியுடனும், அன்புடனும், நலலெண்ணத்துடனும் எதிர்நோக்குவதாக திரு. சாஸ்திரி எடுத்துக் கூறியுள்ளார்.

கொள்ளுப்பிட்டி, திங்கள்

திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையில் சென்ற வாரம் பதவியேற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி - லங்கா சமசமாஜக்கட்சி கூட்டு மந்திரி சபையில் தபால் - தந்தி மந்திரியாக நியமிக்கப்பட்டிருந்த திரு. மகாநாமசமரவீரா தமது மந்திரிப்பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து முன் சபாநாயகராகக் கடமையாற்றிய திரு. ரிச்சர்ட் ஸ்டான்லி பெல்பொல தபால் - தந்தி மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

——

கொழும்பு, திங்கள்

இந்தியவெளிநாட்டுஇலாகா ராஜாங்க மந்திரி ஸ்ரீமதி லக்ஷ்மி மேனன் இவ்வாரம் இலங்கை வருகிறார். வருகிற 18ம் திகதி வரை அவர் பேராதனையில் தங்கியிருந்தபின், 18, 19ம் திகதிகளில் பிரதமரின் விருந்தாளியாக "டெம்பிள் டிரீஸ்" மாளிகையில் தங்கியிருப்பார்.

கள்ளக்கடத்தல் காரருக்கு அபராதம் ரூ. 1020

மாவிட்டபுரம், திங்கள்

இரண்டு இயந்திரங்கள் பூட்டிய ஓர் கட்டுமரத்தில் பதினேழு மூடை பாக்கை இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சாட்டவிரோதமாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நால்வர் கடத்த முயற்சி செய்கையில் காரைநகரிலுள்ள கடற்படையினரின் ரோந்துப் படகான "கொரவக்க" என்ற படகில் சென்ற கடற்படை வீரர்களால் ஆழ்கடலில் வைத்து பிடிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் இயந்திரங்கள் பூட்டிய கட்டுமரத்தையும் பாக்குமூடைகளையும் ஊர்காவற்றுறை சுங்க இலாகாவில் கடற்படையினர் பொறுப்பித்தார்கள். இதுசம்பந்தமாக விசாரணை நடத்திய வடபகுதி சுங்க அதிகாரி திரு எஸ். மதியாபரணம் பாக்கு மூடைகளையும், இயந்திரங்கள் பூட்டிய கட்டுமரத்தையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டு ரூபா 1020 அபராதமும் விதித்தார்.

உடுப்பிட்டி சீனி ஆலையை அபிவிருத்தி செய்ய முயற்சி

நல்லூர், செவ்வாய்

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சீனித் தொழிற்சாலையை அபிவிருத்திசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இத் தொழிற்சாலையை அபிவிருத்திசெய்வதற்காக தொழில்நுட்ப நிபுணர்கள் விரைவில் இங்கு அனுப்பப்பட விருக்கிறார்கள்.

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள கம்பர்மலையில் இத் தொழிற்சாலை அமைந்துள்ளது. பதநீரிலிருந்து சீனி இங்கு செய்யப்பட்டுவந்தது. இத் தொழிற்சாலை அபிவிருத்தி வேலைகளுக்காக சாங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை அபிவிருத்திவேலைகளில் ஈடுபட்டு வந்த நிபுணர் ஒருவர் அங்கு மாற்றப்பட்டுள்ளார்.

பதநீர் சேர்க்கையை ஆதரித்து சீனி உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள தொழிலாளர்களிற் பெரும்பாலோர் பதநீர் உற்பத்தியிலேயே ஈடுபட்டுள்ளார்கள். அவர்களது வாழ்க்கையை உயர்த்தவும் சீனித்தட்டுப்பாட்டை நீக்கவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

20 உதவி மந்திரிகள் டில்லியில் பதவி ஏற்றனர்

புதுடில்லி, ஜூன் 15

இந்தியாவின் உதவி மந்திரியாக 2 நாட்களுக்குமுன் நியமிக்கப்பட்ட 20 பேரும் இன்று ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுக்குமுன் விஸ்வாசப்பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

ராஷ்டிரபதி பவனத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதமமந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரியும், மற்றும் பல 'கெபினட்' மந்திரிகளும் பிரசன்னமாயிருந்தனர். உதவி மந்திரிகளில் திரு. எஸ். வி. ராமசாமி, திரு. பி. எஸ். மூர்த்தி, ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன், திரு. பட்டாபிராமன், ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகர் ஆகிய தமிழ்ப் பிரமுகர்களும் இருக்கின்றனர்.

முன்னாள் உதவி மந்திரி ஸ்ரீமதி தாரகேஸ்வரி சின்ஹா புதிய ஜாபிதாவில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதாரவார விழா போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்

சுகாதாரவார விழா நேற்று மாலை யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் மாநகரசபை முதல்வர் திரு. ரி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் சங்கரப்பிள்ளை, டாக்டர் சிவஞானசுந்தரம், திரு. யோன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

சுகாதாரவார விழா நிகழ்ச்சிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கு மேயர் திரு. ரி. எஸ். துரைராசா பரிசில்கள் வழங்கினார்.

போட்டி முடிவுகள்

பேச்சு — 12 வயதுக்குட்பட்ட மாணவர்கள்:

செல்வி ரமணி கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், செல்வி மிரியம் பரியோவான் பொஸ்கோ, செல்வன் சவுந்தரலிங்கம் பரி ரேஸ் பாடசாலை,

பேச்சு — 12 வயதுக்கு மேற்பட்டோர்:

செல்வி பூலியட் நாவாந்துறை பாடசாலை, செல்வி தமிழ்ச்செல்வி சென் யோன். பொஸ்கோ பாடசாலை, செல்வன் சத்தியசீலன் நாவாந்துறை றே. க. பாடசாலை.

அபிநயப்பா — 12 வயதுக்குட்பட்டோர்:

சென். அந்தனீஸ் றே. க. பாடசாலை, பாசையூர், நமசிவாய வித்தியாசாலை, கொட்டடி, சென். யோவான் பொஸ்கோ பாடசாலை யாழ்ப்பாணம்.

அபிநயப்பா — 12 வயதுக்கு மேற்பட்டோர்:

சென். யோவான் பொஸ்கோ, யாழ்ப்பாணம், கலீத்தா மகா வித்தியாலயம் சோனகதெரு, நாவலர் வித்தியாசாலை, வண்ணார்பண்ணை.

நடனம் அல்லது கும்மி:

வண். கிழக்கு றே. க. பாடசாலை, சென். சார்ல்ஸ் சாதனை பாடசாலை, யாழ்ப்பாணம், சி. சி. எம். பாடசாலை, நல்லூர்.

நடிப்பு:

றே. க. பாடசாலை, நாவாந்துறை, சேணியதெரு ஆங்கில பாடசாலை, சென். யோவான் பொஸ்கோ, யாழ்ப்பாணம்.

(6-ம்பக்கம் பார்க்க)

மணிவாக்கு

எத்தனைதான் ஏற்ற பொருள்களும் பரிசுகளும் கிடைத்தாலும், மக்களின் அன்புக்கும் வாஞ்சைக்கும் மேலானது ஒன்றுமேயிருக்க முடியாது.

— ஜவஹர்லால்நேரு

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

குரோதி ஆண்டு
ஆனி 3 (16-6-64)

இனியும் தாமதம் வேண்டாம்

கூட்டரசாங்கம் ஏற்பட்டதிலிருந்து புதியமந்திரிகள் உற்சாகத்துடன் பணியாற்றத் தொடங்கியுள்ளனர். தமது இலாகாக்களில் நிறைந்துள்ள லஞ்சம் மற்றும் ஊழல்களை ஒழித்துக் கட்டக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். அனாவசிய செலவுகளைக் கட்டுப்படுத்தவும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும் ஆலோசனைகள் கூறுமாறு தமது அமைச்சின் கீழுள்ள இலாகாத் தலைவர்களை நிதிமந்திரி கேட்டிருக்கிறார். வாழ்க்கைச் செலவைக் குறைக்க பல நடவடிக்கைகளை அவர் எடுக்கவிருக்கிறார். கொள்ளைலாபம், மோசடி ஆகியவைகளைத் தடுக்கப் புதிய சட்டங்களைக் கொண்டு வரவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகளைப் பொதுமக்கள் நிச்சயம் வரவேற்பர். அரசாங்கத்தின் நிதி குறைந்து வருகிறதென்பது தமக்குத் தெரியுமென்றும் நிதி மந்திரி கூறியுள்ளார். தெரிந்து கொண்டே பலத்த எதிர்ப்புக் கிடையில் நிதிமந்திரி பதவியை ஏற்றுள்ள டாக்டர் பெரேராவின் துணிச்சலை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கும் தமது திட்டங்களை அமுல் நடத்துவதற்கும் தமது அமைச்சு ஊழியர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் விடுத்த வேண்டுகோள் ஓரளவு பயனளிக்குமென்று எதிர்பார்க்கலாம். ஆனாலும் இதுவரை இருந்துவரும் 'நிர்வாக முறை'யில் மாற்றம் செய்யப்படாதவரையில் எந்த அளவில் ஒத்துழைப்புக் கிடைத்தாலும் தமது நோக்கத்தில் நிதிமந்திரி ஓரளவாவது வெற்றியீட்டுவதும் சந்தேகமே.

புதிய மந்திரிகள் சுறுசுறுப்பாகவும் குறுகிய காலத்திலேயே தமது திறமையைக் காண்பிக்க வேண்டுமென்ற ஆர்வத்தினாலும் பணியாற்றத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சியளிப்பதாயினும் தமது இலாகா ஊழியர்களினதும் சில தொழிற்சங்கங்களினதும் உதவியும் ஒத்துழைப்பும் மாத்திரம் அவர்களின் நோக்கத்தைநிறைவேற்ற மாட்டாது. இந்நாட்டிலுள்ள சகல மக்களினதும் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்தாலே புதியமந்திரிகள் தங்கள் பணியைச் சிறப்புறச் செய்ய முடியும்.

கூட்டு அரசாங்கத்துக்குக் கிளம்பிய எதிர்ப்பு இன்னும் மறையவில்லை. புத்தபிக்குகளுந் தங்கள் எதிர்ப்பை வலுப்படுத்தத் தொடங்கியுள்ளனர். பலம்வாய்ந்த தொழிற்சங்கங்களின் தலைமைப் பீடத்திலுள்ள அரசியல்வாதிகள் கூட்டு அரசாங்கத்தைத் தொடர்ந்து எதிர்க்கின்றனர். ஐக்கியதேசியக்கட்சியும் தனது எதிர்ப்பைக் கைவிடவில்லை. இந்நிலையில் தமிழ்பேசும் மக்களும் தங்களது உரிமைகளுக்காக எதிர்ப்பு இயக்கமொன்றை ஆரம்பித்தால் அரசாங்கத்துக்கு வீண் செலவு ஏற்படும்; நிதிமந்திரியின் சிக்கன முயற்சியும் தோல்வியடையும். பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடைந்து அரசாங்கம் மீண்டும் ஸ்திரமற்ற நிலையை எதிர்நோக்க வேண்டியேற்படும். சிறுபான்மையினரின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாமல் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த முடியாதென்பதை புதியமந்திரிகள் மட்டுமல்ல பிரதமர் உட்பட பழையமந்திரிகளும் நன்கு உணர்வர். என்றாலும் அரசியல் காரணங்களுக்காக அவர்கள் அதை வெளியில் சொல்லத் தயங்கலாம். ஆனால் டாக்டர் என். எம். பெரேரா எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சுபவர் அல்லர். எனவே சிறுபான்மையினரின் ஒத்துழைப்பைப்பெற வேண்டியதன் அவசியத்தையும் அதற்கு முன்னோடியாக அவர்களுக்கு நியாயமான மொழி மற்றும் உரிமைகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் அரசாங்கத்திடம் வலியுறுத்துவாரென்றே நம்பலாம்.

மொழிப் பிரச்னைக்குத் தேசிய ரீதியில் தீர்வு காண முயற்சி செய்யப் போவதாக சிலமாதங்களுக்கு முன்னர் பிரதமர் தெரிவித்தபோது பலரும் அதை வரவேற்றனர், பின்னர் வேலைநிறுத்தம் மற்றும் பல பிரச்னைகளும் ஏற்பட்டதுடன் கூட்டு அரசாங்க பேச்சுவார்த்தைகளும் அதைத் தாமதிக்கச் செய்துவிட்டன. இப்பொழுது கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டுவிட்டது. இனியும் மொழிப் பிரச்னையை ஆறப்போடுவது நல்லதல்ல. முற்போக்குச் சக்திகளினது ஆதரவைப் பெற்றுவிட்டால் மட்டும் போதுமென்று பிரதமர் திருப்தியடைய முடியாது. சிறுபான்மையினரின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் அரசாங்கத்தைச் சுமுகமாக நடத்திச் செல்ல முடியாதென்பது பிரதமருக்கு நன்கு தெரியும். எனவே சிறுபான்மையோரின் பிரச்னைக்கு தேசிய ரீதியில நிரந்தரமான, சுமுகமான தீர்வுகாண பிரதமர் உடனடியாக முயற்சி செய்ய வேண்டும். இனியும் இவ்விஷயத்தில் தாமதம் செய்வது அரசாங்கத்துக்கே நாட்டுக்கோ நிச்சயம் நல்லதல்ல.

மாவட்ட உதவி நீதிபதியாகிறார்

கம்பஹா, திங்கள்

கம்பஹா மாஜிஸ்டிரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் ஜுலை 1-ம் திகதியிலிருந்து கண்டி மாவட்ட உதவி நீதிபதியாக மாற்றலாகிச் செல்கிறார்.

புற்றுநோய் தடுப்பு பிரசாரம்

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் அதிகரித்துவருவதால் இங்கு புற்றுநோய் சிகிச்சை நிலையம் உடனடியாக அமைக்கப்படவேண்டும். தடுப்புச் சிகிச்சை நிலையம் அமைக்கப்படுவதோடு கிரணங்கள் மூலமும் சிகிச்சை அளிக்கப்பட வசதிசெய்ய வேண்டும் என்று சமூகஜோதி திரு. வி. தியாகராஜா கோப்பாயில் நடைபெற்ற புற்றுநோய் தடுப்புப் பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இலங்கை புற்றுநோய் நிவாரண சங்கத் தலைவர் டாக்டர் சந்திரசேகரா உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

புற்றுநோய்யைக் கண்டு அஞ்சவேண்டிய அவசியமில்லை. இந்த நோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து தகுந்த சிகிச்சை செய்யப்பட்டால் புற்றுநோயை மாற்றிவிடலாம். சத்திர சிகிச்சை மூலமும் கிரணங்கள் மூலமும் சிகிச்சையளிக்கப்படுகிறது.

45 வீதம் புற்றுநோய் வாயில்தான் ஏற்படுகிறது. மார்பில் 14 வீதமும், கர்ப்பப்பை வாயிலில் 10 வீதமும் இந்த நோய் ஏற்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 80 வீதம் இந்த நோய் நமது கண்காணக் கூடியதாக ஏற்பட்டும் அதனைக் கண்டுபிடிக்கக் காலதாமதம் ஏற்படுவது வேதனைக்குரியது

புற்றுநோயைப் பற்றிப் பொதுமக்கள் மத்தியில் நன்கு பிரசாரம் செய்யவேண்டும். புற்றுநோய் உண்டாவதற்கான சரியானகாரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வீட்டில் வைத்து இந்த நோயாளர்களைப் பராமரிக்க வசதியில்லாதவர்களுக்கு கொழும்பில் இரு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புற்றுநோய் நிவாரண சங்கமும் இந்த நோயாளருக்கு வேண்டிய பண உதவியும் மற்றும் உதவிகளும் செய்யும்.

வடபகுதி சுகாதார அத்தியட்சகர் டாக்டர் நதானியல், டாக்டர் வி. டி. பசுபதி ஆகியோரும் பேசினர்.

அம்பாந்தோட்டையில் உப்பு அதிகரிப்பு

அம்பாந்தோட்டை, திங்.

அம்பாந்தோட்டை உப்பளத்திலிருந்து 30 ஆயிரம் தொன் உப்பு எடுக்கலாமென தேசிய உப்புக் கார்ப்பரேஷன் ஜெனரல் மனேஜர் எதிர்பார்க்கிறார்.

அம்பாந்தோட்டை உப்பளத்தில் இம்முறை உப்பின் அளவு கூடியிருக்கிறது.

அண்மையில் தொழில் மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா அம்பாந்தோட்டை உப்பளத்துக்கு விஜயம் செய்ததும், அவர் தனது திருப்தியைத் தெரிவித்துக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

அனிலின் கவனம் இ. போ. ச. மீதாம்

கொழும்பு, செவ்வாய்

போக்குவரத்துமந்திரி திரு. அனில் முனிசிங்கா முதலில் இ. போ. ச. மீது தனது கவனத்தைச் செலுத்துவார் என அறியப்படுகிறது. பஸ் சாரதிகள் பற்றுக்குறை பற்றித் தாம் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் பயிற்சிபெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய சாரதிகள் இன்னமும் வைத்திய பரிசோதனைக்குட்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார். அந்தப் பாதையில் பிரயாணிகள் ஏராளமானோர் உள்ளனர் என்று கவனித்து அந்த அந்தப் பாதைகளுக்கு துரிதமாக பஸ்களை அனுப்பி வைப்பதற்காக புதிய அதிகாரிகளை இ. போ. ச. வில் நியமிக்கவும் அவர் யோசித்துள்ளார்.

வேலைநிறுத்தம் நடைபெறாது!

யாழ்ப்பாணம், செவ்வாய்

அகில இலங்கைச் சுகாதார இலாகாவின் யாழ்ப்பாண வைத்தியசாலையைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தாம் முன்பு அறிவித்தபடி வேலைநிறுத்தம் செய்யமாட்டார்களெனத் தெரிவித்துள்ளார்கள். டாக்டர்கள் நதானியல், சங்கரப்பிள்ளை ஆகியோரும் அவர்களது காரியதரிசிகளும், வைத்தியசாலை நிர்வாகத்தாரும், இன்னும் சில அதிகாரிகளும் கொண்ட ஓர் குழு தொழிற்சங்க உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தியதன் விளைவாகவே வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதெனத் தெரியவருகிறது. பேச்சுவார்த்தை நடாத்திய குழு தொழிற்சங்க உறுப்பினர்களின் பல கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு தீர்வு காண முயன்றுவருகிறதென்றும் கூறப்படுகிறது.

ஊழலை ஒழிக்க ஒரு குழு

யாழ்ப்பாணம், செவ்

அரசாங்க தொழிலாளர் சம்மேளன யாழ்ப்பாணக்கிளை புதிய அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க நடவடிக்கைக் குழு ஒன்றைத் தெரிவு செய்துள்ளது. இக்குழுவின் தலைவர் திரு. எஸ். ஆர். அருமைநாயகம் எனவும் திரு. விஸவலிங்கம் காரியதரிசி எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் அரசாங்க இலாகாக்களிலும் உள்ள ஊழல்கள் பற்றி நிதியமைச்சுக்குத் தெரியப்படுத்துவதற்காகவே நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றனவாம்.

எதிர்வரும் சனிக்கிழமை சம்மேளனம் கூடும்போது திரு. அனில்முனிசிங்கா சமூகமளிப்பார் எனவும் அவர் இ போ. ச. டிப்போக்களைப் பார்வையிட வசதிகள்கள் செய்யப்படுகின்றன என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

கோரிக்கைகளுக்கு ஆதரவு தேடினர்

நல்லூர், திங்கள்

இலங்கை தொழிற்சங்க சம்மேளனப் பொதுச்செயலாளர் திரு. என். சண்முகதாசன் கடந்த மூன்று தினங்களாக யாழ்ப்பாணத்திலுள்ளதொழிற்சங்க வாதிகளைச் சந்தித்து நிலைமையை ஆராய்ந்தார்.

தொழிலாளர்களின் 21 அம்சக்கோரிக்கைகள் மீதான போராட்டத்தை விரைவில் நடத்துவதற்கு வடபகுதித் தொழிற்சங்கங்களின் ஆதரவை திரு. சண்முகதாசன் கோரினர்.

ஸ்தல ஸ்தாபன ஊழியர்கள், இ. போ. ச. ஊழியர்கள், ரசாயனத்தொழிலாளர்கள், சிமெந்துத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளை திரு. சண்முகதாசன் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

திட்டம் உகந்ததல்ல

கொழும்பு, செவ்வாய்

டாக்டர் வி. டி. எச். குணவர்த்தனவின் தலைமையில் இயங்கும் 5 உறுப்பினர் கொண்ட கமிட்டி சிபார்சு செய்த வைத்திய ஆலோசனைத் திட்டம் உருப்படியான திட்டம் அல்லவென்றும் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவது அசாத்தியமானதென்றும் கொழும்பு வைத்திய ஆலோசகர்கள் வர்ணித்திருக்கிறார்கள்.

சுகாதார விழா போட்டி முடிவுகள்

கச்சாய், ஞாயிறு

கிளிநொச்சிப் பிரிவில்உள்ள முரசுமோட்டை முருகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற அத்தொகுதிப் பாடசாலைகளின் சுகாதாரக் கதம்ப நிகழ்ச்சிகளில் பரிசில்களும் கிண்ணங்களும் பெற்ற பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு:

சுகாதார நாடகம்

முரசுமோட்டை முருகானந்தா, முரசுமோட்டை ரோமன் கத்தோலிக்க பாடசாலை, கலவெட்டித்திடல் நாகேஸ்வரா.

சம்பாஷணை

முரசுமோட்டை முருகானந்தா, கலவெட்டித்திடல் நாகேஸ்வரா,முரசுமோட்டை ரோமன் கத்தோலிக்க பாடசாலை.

பேச்சு

இராமநாதபுரம் வடக்கு, தருமபுரம் II, தருமபுரம் I, கலவெட்டித்திடல் நாகேஸ்வரா.

பாட்டு

முரசுமோட்டை முருகானந்தா, தருமபுரம் I, தருமபுரம் II,கலவெட்டித்திடல் நாகேஸ்வரா.

நடனம்

முரசுமோட்டை முருகானந்தா, தருமபுரம் II, முரசுமோட்டை ரோமன் கத்தோலிக்க பாடசாலை.

முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலைக்கே கேடயம் கிடைத்தது.

'நாட்டின் நலனுக்காகவே கூட்டரசாங்கம்'

–பிரதம மந்திரி

கம்பளை, திங்கள்

"காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அவரின் பாதையைப் பின்பற்றி, நாட்டின் நன்மைக்காக அமைக்கப்பட்டதுதான் கூட்டரசாங்கமே தவிர சொந்த நலன்களைக்கருதி அது அமைக்கப்படவில்லை" என்று பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா உலப்பனை மகா வித்தியாலய புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டரசாங்கம் ஏற்பட்ட பின் முதல் முதலாக பிரதம மந்திரி கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் இதுதான். பிரதம மந்திரியுடன் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, ரி. பி. இலங்கரத்ன, ஆர். எஸ். பெல்பொல, ஜே. டி. வீரசேகரா, ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வேலைகள் பகிர்ந்தளிக்கப்படும்

கொழும்பு, திங்கள்

அமைச்சுக்களின் வேலைகளை அவற்றின் கீழுள்ள பகுதிகளிடம் பகிர்ந்தளிப்பது பற்றி அரசாங்கம் இப்போது ஆராய்ந்துவருகிறது. மேலதிகமான செலவையும் இரட்டிப்பு வேலையையும் குறைப்பதற்காகவே இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறதாம்.

ஏழுபேர் கைது!

சூட்டுச்சம்பவ எதிரொலி

உடுப்பிட்டி, திங்கள்

கரணவாயில் மண்டான் என்மிடத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களென்ற சந்தேகத்தின் மீது கிட்டிணன், சின்னத்தம்பி,தம்பையன்,செல்லன், இரத்தினன், கிட்டிணபிள்ளை, மயிலன் ஆகியோர் பருத்தித்துறை பொலிசாரால் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சூட்டுச் சம்பவத்தால் மூவர் காயமுற்றதும் ஒருவர் வீட்டு ஆடு, மாடு, கோழிகள் பலியானதும் குறிப்பிடத்தக்கது. பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

தாய்லாந்து யோசனைக்கு மலேஷியா இணக்கம்

வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு இனி நடக்கும்?

டோக்கியோ, ஜூன் 15

மலேஷிய எல்லையிலிருந்து இந்தோனேஷிய கொரில்லாக்களை விலக்குவதை மேற்பார்வையிடுவது சம்பந்தமாக தாய்லாந்து தெரிவித்த யோசனையைத் தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாக மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

துங்கு ரஹ்மான் நேற்று டோக்கியோ வந்து சேர்ந்தார். ஏற்கெனவே இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோவும், பிலிப்பைன்ஸ் அதிபர் மகபகாலும் டோக்கியோவில் இருக்கின்றனர்.

கொரில்லாக்கள் வாபஸ் பெறுவதை மேற்பார்வையிடும் பொருட்டு இந்தோனேஷிய எல்லையில் 2 காவல் நிலையங்களையும் மலேஷிய எல்லையில் 2 காவல் நிலையங்களையும் நிறுவ வேண்டும் என்பது தாய்லாந்தின் யோசனை. இந்த யோசனையை ஏற்கெனவே இந்தோனேஷியா ஏற்றுக்கொண்டிருக்கிறது. இருபக்கத்துக் காவல்நிலையங்களும் எதிரெதிராக அமைந்திருக்க வேண்டும் என்பதும் தாய்லாந்தின் யோசனையாகும்.

இருசாராரும் இந்த யோசனைகளை ஏற்றுக் கொண்டதன் காரணமாக வெளிநாட்டுமந்திரிகள் மகாநாடு கூடுவதற்கிருந்த முட்டுக்கட்டைகள் நீங்கியிருக்கின்றன எனக் கூறப்படுகிறது.

துங்கு ரஹ்மான் டோக்கியோ சேர்ந்தபின் இருசாராரும் வெளிமந்திரிகள் கூட்டம் நடத்துவதுபற்றி விறுவிறுப்பான ஆலோசனையில் இறங்கியிருக்கிறார்கள்

வெளிமந்திரிகள் கூட்டம் நடக்கும்போதே படைகள் விலக்கப்பட வேண்டும் என துங்கு நிபந்தனை விதித்திருக்கிறார்.

தென்னாபிரிக்கா மீது ரஸ்ஸல் பிரபு கண்டனம்

லண்டன், ஜூன் 15

உலக முழுதுமுள்ள தொழிலாளர் இயக்கத்தினர் தென்னாபிரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்யப்படவிருக்கும் பண்டங்களையும் அங்கிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் பண்டங்களையும் கையாளாமல் இருந்தால் அந்நாடு கஷ்டத்திற்குள்ளாகும் என 92 வயதான பிரிட்டிஷ் தத்துவஞானி ரஸ்ஸல்பிரபு லண்டனில் நடைபெற்ற இனவேற்றுமைஎதிர்ப்புக் கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார்.

3000 பேரடங்கிய இக்கூட்டத்தில் பேசிய மற்றும் பலர் பிரிட்டன் அந்த நாட்டுடன் ராஜீய உறவை முறித்துக் கொண்டு, வர்த்தக பகிஷ்காரத்தையும் மேற்கொண்டால் தென்னாபிரிக்கா வீழ்ச்சியடையும் எனக் கூறினர்.

தற்போது ஸான்ஸிபாரில் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் எதியோப்பிய மன்னர் ஹெயிலி ஸெலாஸி தென்னாபிரிக்காவில் தேசியத் தலைவர்களுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருப்பது குறித்து கண்டனம் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு நீண்டகால அமெரிக்க ஆயுத உதவி

பூட்டோ கண்டனம்

ராவல்பிண்டி, ஜூன் 15

இந்தியாவுக்கு நீண்டகால அடிப்படையில் அமெரிக்கா ஆயுதஉதவி அளிப்பதன்மூலம் பெரும் ஆயுதப் போட்டிக்கு வழி செய்கிறது என பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி திரு. புட்டோ குற்றஞ்சாட்டினார்.

"இந்தியாவுக்கு நீண்டகால அடிப்படையில் ஆயுத உதவி அளிப்பதென்ற அமெரிக்காவின் சமீபத்திய முடிவு பாரதூரமான அரசியல் விளைவுகளை ஏற்படுத்தி ஆசியாவிலும் ஆபிரிக்காவலும் உலகத்திலும் சமபலத்தைப் பாதிக்கும். திரு. நேரு காலமான இச்சமயத்தில் அமெரிக்காவின் முடிவு வெளியிடுவது மிகவும் துக்ககரமானது" என்றும் புட்டோ கூறினார்.

பாகிஸ்தான் சீனாவுடன் ராணுவ ஒப்பந்தம் ஏதும் செய்து கொண்டால் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அளிக்கும் உதவியை வாபஸ்பெற்றுக் கொள்ளும் என்பது பற்றி அவர் குறிப்பிட்டபோது அஸ்வான் அணை விஷயமாக தாம் இழைத்த தவறை அமெரிக்கா மீண்டும் செய்ய விரும்புகிறதா என்று கேட்டார்.

அனுதாபம்

புங்குடுதீவு, ஞாயிறு

நேருவின் மறைவுகுறித்து புங்குடுதீவு கிராம சபையினரால் திரு. சி. கு. அம்பிகைபாகன் தலைமையில் இரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் அனுதாபத்தையும் அன்னாரின் புதல்வி இந்திரா காந்திக்கு அறிவிக்கப்படவேண்டுமென்றும், அன்னாரின் மறைவுகுறித்து வருந்தும் குடும்பத்தினருக்கும் இந்திய மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிங்கப்பூர் இந்து ஆலயங்கள் சீரமைப்பு

சிங்கப்பூர், ஜூன் 14

ஆர்ச்சர்ட் தெருவிலுள்ள சிவன் கோவிலும், ரங்கூன் தெருவிலுள்ள பெருமாள் கோவிலும் சிங்கப்பூரின் மிகப் பழமையான ஹிந்து ஆலயங்கள். அவற்றைப் புனருத்தாரணம் செய்வதற்கு இந்தியாவிலிருந்து ஆலயம் கட்டும் சிற்பிகள் வரவேண்டியிருந்தது. அவர்கள் வருவதில் தாமதம் ஏற்பட்டதால் ஆலயங்களின் புனருத்தாரண வேலை பூர்த்தியாவதிலும் தாமதம் ஏற்பட்டது.

இத் தகவலை சிங்கப்பூர் அஸெம்பிளியில் சமூகசேவா மந்திரி திரு. ஆத்மன்வோக் கூறினார். "ஸதல குத்தகைக்காரர்கள் 1961 ஏப்ரலில் கட்டுமான வேலையை ஆரம்பித்தனர். 1962 மே மாதம் அவர்கள் தமது வேலையைப் பூர்த்திசெய்தனர். ஆனால் சிற்ப வேலைகளை, இந்தியாவிலிருந்து ஆலய சிற்பிகள் வந்து செய்யவேண்டியதாக இருந்தது. சென்றவருட இறுதியில் அவர்கள் வந்தனர். அதிலிருந்து வேலை நடைபெற்று வருகிறது. பொதுவாக ஹிந்து ஆலயங்களின் வேலைகள் மெதுவாகத்தான் நடைபெறுவது வழக்கம்" என்றும் மந்திரி கூறினார்.

"இந்த ஆலயங்களின் புனருத்தாரண வேலைக்கு 3,85,000 மலேயா டாலர் சிவன் கோவிலுக்கும், 2,75,000 டாலர் பெருமாள் கோவிலுக்கும் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவரை பொதுஜனங்கள் மூலமாக 83,000 டாலர் நன்கொடை கிடைத்திருக்கிறது. சிங்கப்பூர் நகரசபை 50,000 நன்கொடை அளித்தது" என்றும் மந்திரி தெரிவித்தார்.

கெய்ரோன் பற்றி எம்.பி.க்கள் கூட்டம்

புதுடில்லி, ஜூன் 15

பஞ்சாப் முதன்மந்திரி திரு. கெய்ரோனின் ராஜிநாமா குறித்தும் தாஸ் கமிஷன் அறிக்கை குறித்தும் ஆராய காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சிககூட்டம் வருகிற புதன்கிழமை நடைபெறவிருப்பதாக பிரதமமந்திரி சாஸ்திரி தெரிவித்தார்.

திரு. கெய்ரோனின் ராஜிநாமா தமக்குக் கிடைத்திருப்பதாயும் அவர் கௌரவமான ஒன்றைச் செய்துவிட்டார் என்றும் பிரதமமந்திரி கூறினார்.

வினோபாஜிக்கு மயக்கம்

புதுடில்லி, ஜூன் 15

ஆச்சார்யா வினோபா பாவே நேற்று வார்தாவிலிருந்து பாதயாத்திரையை ஆரம்பித்த சற்று நேரத்தில் அவருக்கு மயக்கம் ஏற்பட்டது. உடன் அவர் ஜீப்பில் கொண்டு செல்லபபட்டு டாக்டர்களால் பரிசோதனை செய்யப்பட்டார். ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி டாக்டர்கள் ஆலோசனை கூறினர். நிலைமை பயப்படும் படியாக இல்லை என அறிவிக்கப்படுகிறது.

பண்டிதருக்கு அண்ணா புகழ்மாலை

சென்னை, ஜூன் 15

சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக்கழக கூட்டமொன்றில் திரு. அண்ணாதுரை காலஞ்சென்ற நேருவுக்கு புகழுரை கூறினார்.

திரு. நேருவின் மறைவு இந்தியாவுக்கு மட்டுமன்றி, அகில உலகுக்கும் ஒரு பேரிழப்பு என்றும் இந்தப் பெரும் நஷ்டம் குறித்து திராவிடமுன்னேற்றக்கழகம் வருந்துகிறது என்றும் கூறினார்.

"ஸ்ரீநேரு மாபெரும் ஜனநாயகவாதி. மக்கள் கருத்துக்கு மதிப்பளித்தார்" என்றும் அண்ணாதுரை கூறினார்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சி

டேர்பி, ஜூன் 15

பிரிட்டனில் தொழிற்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தால் உருக்குத் தொழில் அனைத்தையும் பொதுச் சொத்தாக்குமென தொழிற்கட்சித் தலைவர் திரு. ஹரோல்ட் வில்சன் கூறினார்.

விஞ்ஞான தொழில்நுட்ப அடிப்படையில் பொதுமக்களுக்குச் சொந்தமாக்கும் கைத்தொழிலுக்கும் தேசியமயத்துக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள கன்சர்வேட்டிவ்கள் மறுக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

முதன்மந்திரிகள் மகாநாடு

புதுடில்லி, ஜூன் 15

விலைவாசி உயர்வுபற்றி ஆராய முதன் மந்திரிகளின் கூட்டம் ஒன்று விரைவில் நடத்தப்படும் என பிரதமமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி அறிவித்தார். இதற்கான திகதி இன்னும் நிச்சயிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியை விரைவில் நடத்தவேண்டுமென அக்ராசனர் காமராஜர் விரும்புகிறார் என்றும் திரு. சாஸ்திரி அறிவித்தார்.

"தமிழுக்குரிய இடம் விரைவில் கிடைக்கும்"

கூட்டரசாங்கம் பற்றி மூதூர் எம். பி. நம்பிக்கை

கொழும்பு, திங்கள்

"கூட்டரசாங்கம் தமிழுக்குரிய இடத்தைக் கொடுப்பதற்கான காலநேரம் வெகு தூரத்திலில்லை. பாராளுமன்ற அரசாங்கக் கட்சியிலே ஓர் அங்கத்தவன் என்ற முறையிலும், 'டெம்பிள் டிரீஸில்' இதுபற்றி தொடர்புகொண்டவன் என்ற முறையிலும் கூறுகிறேன்" என்று மூதூர் 2-வது எம்.பி. ஐ. எம். ஏ. மஜீத் கொழும்பில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அண்மையில் இரு புத்தகங்களை வெளியிட்ட ஜனாப் எம். ஏ. ரஹ்மான், திரு. கனக செந்திநாதன் ஆகியோரைப் பாராட்டுமுகமாக நடைபெற்ற கூட்டத்தில்தான் அவர் மேற்கண்டவாறு கூறினார். திரு. எப். எக்ஸ். சி. நடராசா தலைமைவகித்தார்.

திரு. கே. பாலச்சந்திரன் வங்வேற்புரை நிகழ்த்தினார். திரு. கே. எஸ். நடராசா, திரு. ஏ. கந்தையா, எஸ். பொன்னுத்துரை, பண்டிதர் எஸ். வேலுப்பிள்ளை, திருமதி மீனாட்சி பொன்னுத்துரை ஆகியோரும் பேசினார்கள்.

நீக்ரோக்கள் கைது

புளோரிடா, ஜூன் 15

இங்கு நடைபெற்ற இனஒதுக்கல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்காரணமாக கடந்த 6 தினங்களில் 120 நீக்ரோக்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

கோவாவில் எஃகு ஆலை

பஞ்சிம், ஜூன் 15

கோவாவில் 5 கோடி ரூபா பெறுமதியான எஃகு ஆலை அமைக்க மத்திய அரசாங்கம் சம்மதித்திருக்கிறது என ராஜ்ய முதன்மந்திரி கூறினார்.

பஸ்விபத்தில் 26 பேர் பலி

அங்காரா, ஜூன் 15

துருக்கியில் பஸ் ஒன்று ஓடைக்குள் விழுந்ததால் 26 பேர் மூழ்கினர் என்றும், 30 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

அஸ்தி

புதுடில்லி, ஜூன் 15

பிரதமர் நேருவின் அஸ்தியின் ஒரு பகுதி பத்திரிநாத்திலுள்ள அலகநந்தா ஆற்றில் நேற்று கரைக்கப்பட்டது.

எல்லையில் சூட்டு சம்பவம்

புதுடில்லி, ஜூன் 15

கடந்த வெள்ளிக்கிழமை காஷ்மீர் போர்நிறுதத எல்லையில் பாகிஸ்தான் துருப்புக்கள் மூன்று இடங்களில் சுட்டதாகவும், இந்தியத் துருப்புக்கள் திருப்பிச் சுட்டதாகவும் இதுபற்றி ஐ. நா. பார்வையாளர்களுககு அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்பட்டது.

விஜயவாடாவில் 5-வது தீவைப்பு

விஜயவாடா, ஜூன் 15

விஜயவாடவில் நேற்று 200 குடிசைகள் தீயினால் சாம்பலாயின. 7 தீயணைப்பு என்ஜின்கள் பலமணிநேரம் போராடி தீ மேலும் பரவாமல் தடுத்துவிட்டன. கடந்த புதன்கிழமைமுதல் இதுவரை இவ்வித தீச் சம்பவங்கள் நடப்பது இது ஐந்தாவது தடவையாகும். இவை சம்பந்தமாக 46பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

'பதவி உயர்வு வேண்டும்'

யாழ்ப்பாணம், செவ்

"மூன்றாந்தரக் குமாஸ்தாக்களாகச் சேர்ந்தவர்கள் உயர்தர சிவில் சேவை அதிகாரிகளாகப் பதவி உயர்ச்சி பெற்றுத் திறம்பட நிர்வாகம் நடத்துவதைத் தெரிந்திருந்தும் பயிற்றப்பட்ட தமிழாசிரியர் ஒருவர் நீண்டகாலத் திறமையான சேவைக்குப்பின் மூன்றாந்தர அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டதைக் கண்டுமுகத்தைச் சுளிக்கும் யாழ்ப்பாணத்துப் பிரமுகர்களைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை" என்று சமீபத்தில் 3 தமிழாசிரியர்களுக்கு மூன்றாந்தரத் தலைமையாசிரியர்பதவி வழங்கிய அரசாங்கத்தைப் பாராட்டுவதற்காக அகில இலங்கைத் தமிழாசிரியர்சங்க நிர்வாகசபை கூடியபோது தலைவர் திரு இ. கந்தையா கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சாதாரண தபாற் குமாஸ்தா காலாந்தரத்தில் அப்பகுதிப் பிரதம நிர்வாகியாக வருவதாகவும் இவ்விதமே அரசாங்க சேவையின் எப்பகுதியிலும் நடப்பதாகவும் அவற்றையெல்லாம் அனைவரும் அங்கீகரிப்பவர்களாக இருக்கிறார்களென்றும், ஆயின் தமிழாசிரியர் பதவி உயர்ச்சி பெறும் போதுமட்டும் பட்டதாரிகள் இடத்திற்குப் பழந்தமிழாசிரியரா எனப்பதைக்கிறார்களென்றும் மூன்றே மூன்று ஆசிரியர்களை மட்டும் பதவி உயர்த்திவிட்டு அரசாங்கம் திருப்திப்பட்டுவிடக்கூடாதென்றும் மேலும் தமிழாசிரியருக்கு தலைமை ஆசிரியர் பதவி மட்டுமல்ல வித்தியாதரிசி போன்ற நிர்வாகப் பதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

கடிதத்தின் கதி என்ன?

சுழிபுரம், திங்கள்

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றச் செயலாளரால் மார்ச் மாதம் 4-ம் திகதி நீர்வேலித் தபால் நிலையத்திலிருந்து கொழும்புக்கு அனுப்பப்பட்ட விமான கடுகதிக் கடிதம் இன்று வரையும் உரியவரிடம் போய் சேரவில்லை! இக் கடிதத்தின் நிலை என்ன என்பதை அறியத் தரும்படி மேற்படி மன்றச் செயலாளர் பெரிய தபாற் கந்தோர் அதிபர், தபால் தந்தி மந்திரி ஆகிரைக்கேட்டுள்ளார்.

லாவோஸ்

வியன்டைன், ஜூன் 15

லாவோஸ்பற்றி 6 நாடுகளின் தூதர்கள் மகாநாடு நேற்று மீண்டும் நடைபெற்றது. 2 மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

டிரினிடாட் கவர்னர்ஜெனரல்

புதுடில்லி, ஜூன் 15

டிரினிடாட் — டோபோவின் கவர்னர் ஜெனரல் இந்தியாவில் 9 நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொருட்டு நேற்று புதுடில்லி வந்தார்.

ரயில் விபத்தில் மூவர் பலி

கல்கத்தா, ஜூன் 15

கல்கத்தாவுக்கப்பால் பம்பாய்—ஹௌரா மெயிலுடன் லொறியொன்று மோதியது காரணமாக 3 பேர் கொல்லப்பட்டனர்.

மாணவர் மலர்

சந்திர மண்டலம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

— மகான் —

வாயு மண்டலம் அற்ற சந்திரனிலுள்ள சூன்யப் பிரதேசம் மிகவும் உபயோகமாகவிருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஏன் என்றால், அபூர்வமான உலோகங்களையும் உயர்தரமான எஃகையும் தயாரிக்க இத்தகைய சூன்யப் பிரதேசம் தேவைப்படுகிறதாம். இத்தகைய சூன்யப் பிரதேசத்தை பூமியிலுள்ள தொழிற்சாலைகளில் உண்டாக்குவதற்கு விஞ்ஞானிகள் முயற்சிசெய்துவருகிறார்கள். ஆனால் இங்கு—பூவுலகில் முயற்சிசெய்வதைவிட, சந்திரனிலேயே உலோகத் தொழிற்சாலைகளை கட்டிவிடலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். சோவியத் விஞ்ஞானி ஒருவரும் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

எதிர் காலத்தில், உலகத்திற்கு வேண்டிய உலோகங்கள் சந்திரனிலே தயாரிக்கப்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை! அவ்வளவுக்கு சந்திரமண்டலம் சாத்தியப்படுமென்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

சந்திர மண்டலத்தில் பல தொழிற்சாலைகளை நிறுவமுன்னர் எப்படியும் மனிதன் அங்கு பிரவேசித்துத்தானே ஆகவேண்டும். ஆகையினால் மனிதன் அங்கு செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றி சிறிது கவனிப்போம்.

சந்திர மண்டல பிரயாணத்தில் ரஷ்யாவைவிட அமெரிக்காதான் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த மாபெரும் திட்டத்துக்கு இப்பொழுது ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆபத்து எதனால் தெரியுமா? கொசுக்களால்தான்!

மிசிசிப்பி மாகாண நியூ ஆர்லியன்ஸ் நகருக்கு சமீபத்தில்தான் அமெரிக்காவின் வியப்பூட்டும் சந்திர மண்டல பயணத்திட்டத்தின் தளம் உள்ளது. மும்முரமாக இங்கு வேலைகள் நடைபெற்றுக்கொண்டுவரும் இக்கட்டத்தில் மிசிசிப்பி ஆற்றின் ஒரு பகுதியிலுள்ள சதுப்பு நிலங்களிலிருந்து படையெடுத்துவரும் கொசுக்களின் தொல்லையை மேற்படி தளத்தில் வேலைசெய்யும்பொறியியலர்களால் தாங்க முடியவில்லை. இக்கொசுக்களை அழிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படாவிட்டால் தளத்தில் வேலைசெய்வதைவிட்டு வெளியேறிவிடுவோம் என்று பொறியியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கொசுக்கள் பற்றி அனுபவப்பட்ட ஒரு பொறியியலார் என்ன சொல்கிறார் தெரியுமா? இதோ: "அப்பப்பா……அது கொசுக்களா? அவற்றைப் பிடித்து சேணமிட்டு சவாரியும் செய்யலாம்!" மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதல்லவா?

இப்படியான பல சங்கடங்களும் இருந்து வருகையில் சந்திரமண்டலத்திட்டம் வெற்றிபெறுமா என்று தானே நீங்கள் சிந்திக்கின்றீர்கள்? இதில் சிறிதளவேனும் சந்தேகப்படத் தேவையில்லை. சந்திர மண்டலப் பிரயாணத் திட்டம் எப்படியும் நிறைவேறத்தான் போகிறது. இந்த முயற்சியில் அமெரிக்கா ஒருவேளை ரஷ்யாவை முத்தினாலும் முந்திவிடலாம்.

எப்பொழுது? இதுதான் உலகம் எதிர்பார்த்திருக்கும் பெரிய கேள்வி விடை…?

1970-ம் ஆண்டுக்குள் மனிதன் சந்திரமண்டலத்தை அடைந்தே தீருவான். இது அசைக்க முடியாத உண்மை!

(முற்றும்)

மூளைக்கு வேலை

கடந்த வாரம் நான் கேட்ட கேள்விக்கு ஏராளமான பேர் விடையனுப்பியுள்ளனர். பலர், மாணவர் மலரின் "மூளைக்கு வேலை" பகுதியைப் பாராட்டி கடிதம் அனுப்பியுள்ளனர். இவர்கள் எல்லோருக்கும் எனது பாராட்டுதல்கள்.

ஆபிரஹாம் லிங்கன், மகாத்மா காந்தி, கென்னடி, நேரு, குருஷ்சேவ் ஆகிய ஐந்து தலைவர்களிலும் உங்களுக்கு மிகவும் பிடித்தமான தலைவர் யார் என்று சென்ற வாரம் கேட்டிருந்தேன் அல்லவா? இதற்கு நீங்கள் அனுப்பியிருந்த விடைகளின் படி யார் முதலில் இடம்பெறுகிறார் என்பதை வரிசைக் கிரமமாக தருகின்றேன்.

(1) மகாத்மாகாந்தி, (2) ஆபிரகாம் லிங்கன் (3) ஜவஹர்லால் நேரு, (4) கென்னடி, (5) குருஷ்சேவ்.

மகாத்மா காந்தியே எனக்கு மிகவும் பிடித்த தலைவர் என்று விரும்பியவர்களின் பெயர்கள் வருமாறு:

நா. சிவலிங்கம், வல்வெட்டித்துறை; ம. நாகேந்திரன், மானிப்பாய்; மு. ரதி, வட்டுக்கோட்டை; மு. நித்தியானந்தராசா, வட்டுக்கோட்டை; இரா. குசைதாஸ், நாரந்தனை; ச. வாசுதேவன், யாழ்ப்பாணம்; ஸ்ரீஸ்கந்தலீலா செல்வரெட்னம், வேம்படி மகளிர் கல்லூரி; கே. யோகநாதன், வைத்தீஸ்வரவித்தியாலயம், யாழ்ப்பாணம்; ந. விமலாதேவி, மாதவமணி வைரமுத்து, காங்கேசன்துறை; மு இராசகுலேந்திரன், சங்கானை; ந. அழகேஸ்வரி, காங்கேசன்துறை; இ. நடராஜசர்மா, சித்தங்கேணி; செ. விஜயபதி, வைத்தீஸ்வரா, யாழ்ப்பாணம்; பொ. தவமணிதேவி, மகளிர் உயர்நிலைப் பாடசாலை, பண்டத்தரிப்பு; வே. கதிரமலை, மானிப்பாய்; ச. விமலராஜன், சண்டிலுப்பாய்; சத்தியேஸ்வரி கனகசபை, மானிப்பாய்; இ. அம்பிகைராஜா, கொட்டடி; மு. சந்திரகுமார், சங்கானை; ஜீவா அரசரட்னம், செட்டிகுளம்; மாலினி ஸ்ரீநிவாசன், உடுவில்; அன்ரன் செல்லையா, பண்டத்தரிப்பு; தா. ரவீந்திரன், காரைநகர் வடக்கு; வி. ஜி. எஸ். அரியாலை; க. சீவகாருண்யம், சண்முகநாதமகாவித்தியாலயம், கரம்பன் மேற்கு; கே. ரவீந்திரன், இ மயூரநாதன், சித்திஜனனு, நா. லேசகநாதன், க. கணேசமூர்த்தி, வைத்தீஸ்வரவித்தியாலயம், யாழ்ப்பாணம்; சி போகேஸ்வரி, யோ. விஜயரட்னம், பண்டத்தரிப்பு; சி. ரட்ணசதா, த. ஜெகசோதி, செ. மகேஸ்வரி, காங்கேசன்துறை; இ. சந்திரசேகரம், சங்கானை.

ஆபிரஹாம் லிங்கனே எனக்குப் பிடித்தவர் என்று எழுதியவர்களின் பெயர்கள் வருமாறு:

இ. சோ. கு. பவளம், இடைக்காடு; வ. செ. வலத்தீஸ், முள்ளியான்; நாகேஸ்வரி சிவலிங்கம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்; பி. சக்திபலட்சுமி, காங்கேசன்துறை; க. மயில்வாகனம், கைதடி தெற்கு; அ. கனகசூரியர் ஊரெழு மேற்கு; வை. அகிலத்திருநாயகம், மண்டைதீவு; வே. கோபாலசுந்தரம், அரியாலை; கு. வில்வலிங்கம், கைதடி தெற்கு; சி. தங்கரத்தினம், பொ. புவனு, வ. சுகந்தி, காங்கேசன்துறை; ஸ்ரீஸ்கந்ததேவி செல்வரட்னம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

அண்மையில் காலமான இந்தியப் பிரதமர் நேருவே எனக்குப் பிடித்தமான தலைவர் என்று பின்வருவோர் எழுதியிருக்கின்றனர்.

ந. கதிரேசன், திருநெல்வேலி கிழக்கு; ந. கமலாதேவி, நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை; த. திருநாவுக்கரசு, மாவிட்டபுரம்; சி. வாசுதேவன், பருத்தித்துறை; க. ஜெகதா, புங்குடுதீவு; சி. இலட்சுமிகாந்தன், ஏழாலை; சு. சிவரத்தினராசா, கைதடி; சி. தயானந்தன், காங்கேசன்துறை; வயலட் யேசுதாசன், யாழ்ப்பாணம்.

கென்னடியே எனக்கு பிடித்த தலைவர் என்று பின்வருவோர் எழுதியுள்ளனர்.

ஆ. சிவயோகம், உரும்பராய்; த. சின்னத்தம்பி, பளை; மல்லிகாதேவி இராசையா, காங்கேசன்துறை; வை தட்சணாமூர்த்தி, புங்குடுதீவு; [illegible] இ. அ. பெனடிற், இளவாலை; [illegible] யேசுதாசன், யாழ்ப்பாணம்; சி. கந்தசாமி, காங்கேசன்துறை.

குருஷ்சேவ் குறித்து எவருமே எழுதவில்லை.

— சாந்தா

சிரியுங்கள்! சிந்தியுங்கள்!

— ஆ. சிவயோகம் —

விமலா: மாலா இந்தப் பத்துச் சதத்திற்கு 'ஈழநாடு' வாங்கிவா.

மாலா: என்ன விமலா…? ஈழநாடுதானே இலங்கை. அதை உனக்குப் பத்துச் சதத்திற்குத் தருவார்களா?

* * *

ஆசிரியர்: உங்கள் ஊரிலே உள்ள பெரியார் யார்?

ஒரு மாணவன்: என் அண்ணாவேதான் எமது ஊரில்பெரியவர் சார்! அவர் உயரம், 6 அடி 2 அங்குலம் சார்!

* * *

இலக்கண ஆசிரியர்: 'சூரியன் தோன்றினான்' இது என்ன காலம்?

மாணவன்: அது பகல்காலம் சார்!

எதிர்பாராத சந்திப்பு

—எஸ். விநாயகமூர்த்தி—

ஒரு நாள் ஒரு பணக்காரச் சிறுவன் கிராமத்திற்குப் போனான். அங்கே ஒரு அழகிய குளம் இருந்தது. அதில் நீந்தவேண்டுமென்று அவனுக்கு ஆசை உண்டாயிற்று. உடனே அதில் குதித்தான். வெகுதூரம் போய்விட்டான் திரும்பிவர அவனால் முடியவில்லை. களைத்துப்போய்விட்டான் உடனே, "ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்" என்று கத்தினான். அப்போது அவனைப் போல மற்றொரு சிறுவன் அங்கே மாடு மேய்த்துக்கொண்டிருந்தான். அவன் குளத்தில் குதித்தான். சிறுவனைக்கொண்டுவந்து பத்திரமாகக் கரைசேர்த்தான். பிழைத்துக்கொண்ட அந்தச் சிறுவன் இடைப்பையனுக்கு நன்றி தெரிவித்துவிட்டுத் தன்னுடைய சொந்த ஊராகிய லண்டனுக்குப்போய்விட்டான்.

பத்து வருஷங்கள் கழிந்தன. அந்தப் பணக்காரச் சிறுவன் இப்பொழுது நல்ல வாலிபனாகிவிட்டான். ஒருநாள் அவன் பழைய கிராமத்திற்குப் போனான். அந்த இடைப்பையனைப் பார்த்தான் "உனக்கு நான் ஏதாவது உதவி செய்யவேண்டுமா?" என்று கேட்டான். "எனக்கு வைத்தியம் படிக்க வேண்டுமென்று ரொம்ப ஆசையாக இருக்கிறது" என்றான் இடைப்பையன். "நல்லது என்னுடன் புறப்பட்டு வா" என்று சொல்லிவிட்டு அந்தப் பணக்கார இளைஞன் இடையனைத் தன்னுடன் லண்டனுக்கு அழைத்துக் கொண்டு போனான்.

ஒன்றன் பின் ஒன்றாகப் பல வருஷங்கள் கழிந்தன. இடைப்பையன் வைத்தியக் கல்லூரியிற் சேர்ந்து படித்தான். பட்டம்பெற்றான். புகழ்பெற்ற டாக்டரானான். உலகம் முழுவதும் கண்டு வியக்கும் பென்ஸிலின் மருந்தைக் கண்டுபிடித்தான். அந்த இடைப்பையன்தான் டாக்டர் அலெக்ஸாண்டர் பிளெமிங்.

பல வருஷங்கள் கழிந்தன. பணக்கார இளைஞன் கிழவனாகிவிட்டான். அரசாங்கத்திலே மிகவும் பெரிய பதவிக்கு வந்துவிட்டான். ஒரு நாள் அவனுக்குக் கடுமையான ஜுரம் கண்டது. டாக்டர்கள் என்னென்னவோ மருந்துகளெல்லாம் கொடுத்துப்பார்த்தார்கள். நோய் குணமாகவில்லை. கடைசியில் அவர் பிழைக்கமாட்டார் என்றும் சொல்லிவிட்டார்கள். அப்பொழுது திடீரென வேறொரு டாக்டர் அங்கு வந்தார், அவர் கிழவனுக்குப் பென்ஸிலின் ஊசிபோட்டார். அவர் பிழைத்துக்கொண்டார். இடைப்பையனாகிய டாக்டர் பிளெமிங் மறுபடியும் அவரைக் காப்பாற்றிவிட்டார்.

அந்தப் பணக்கார இளைஞன்தான் பிற்காலத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக விளங்கிய சேர் வின்ஸ்டன் சர்ச்சில்!

இருவரும் எதிர்பாராத வகையில் அவர்களின் சந்திப்பு அமைந்திருக்கின்றன!

பொது மேடை

சென்ற செவ்வாய்க்கிழமை (9-6-64) வெளியாகிய மூளைக்கு வேலை பகுதியின் விடை: அதாவது விசேட பாராட்டுப்பெற்ற விடை தங்கள் நிபந்தனைகளுக்குட்பட்டதாக அமையவில்லை. அதாவது தங்கள் நிபந்தனைப்படி ஐந்து அல்லது ஆறு சொற்களடங்கிய ஒரு வசனம் எழுதுவதற்குப் பதிலாக எட்டுச் சொற்களடங்கிய நான்கு வசனங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க தாங்கள் எப்படி அவ்வசனங்களை முதலாவதாகத் தெரிவு செய்யலாம். இதன் காரணத்தை அறிவிப்பீர்களா?

—சத்தியேஸ்வரி கனகசபை,
மானிப்பாய்.

குறிப்பு: கிடைக்கப்பெற்ற கடிதங்களிலும் தபாலட்டைகளிலும் வரவேற்கக் கூடிய அளவுக்கு கருத்து நிறைந்த வசனம் இல்லை. அத்துடன் பலர் எட்டு, ஒன்பது வார்த்தைகளைக் கொண்ட வசனத்தையேஎழுதியனுப்பியிருந்தனர். இதன் காரணமாகவே சாந்தா அப்படியாக தேர்ந்தெடுத்திருந்தார்.

★

நீங்கள் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் நடத்தும் மாணவர் மலரைவாசித்து இன்புற்றேன். நான் ஓர் தொடர் கதை எழுதி மாணவர் மலருக்கு அனுப்ப ஆசைப்படுகிறேன். எனது ஆசையை நிறைவேற்றுவீர்களா?

—சி. இலட்சுமிகாந்தன்,
இந்துக் கல்லூரி, மல்லாகம்.

குறிப்பு: கதையை முதலில் அனுப்பிவையுங்கள். தகுதியிருந்தால் பிரசுரிப்போம்.

அமெரிக்கா

— "ஐங்கரன்" —

1492ம் ஆண்டு கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தான்.

1497ல் "அமெரிக்கஸ் வெஸ்புஸியஸ்" என்னும் மாலுமி அமெரிக்காவுக்கு சென்றதன் பின்பு "அமெரிக்கா" என்ற பெயர் ஏற்பட்டது.

1691ம் ஆண்டு அமெரிக்காவில் முதல் "தபால் நிலையம்" ஆரம்பிக்கப்பட்டது.

1776ல் அமெரிக்கா சுதந்திரமடைந்தது.

1831ம் ஆண்டு அமெரிக்காவில் முதல் புகைவண்டி ஓடியது.

1862ல் அமெரிக்காவில் அடிமை ஒழிக்கப்பட்டது.

1928ல் அமெரிக்காவிலே முதல் முதலாக 'பேசும் படம்' காண்பிக்கப்பட்டது.

கண்டு பிடித்தவர்கள்

— சி. சிவகாந்தன் —

டெலிவிஷன்—பெயர்டு, மின் விளக்கு — எடிசன், வில் விளக்கு—டேவி, சினிமாப்புரொஜக்டர்—தோமஸ் ஆல்வா எடிசன், கார் — ஹென்றிபோர்டு, ஆகாய விமானம் — வில்பர் ரைட், ஆர்வில்ரைட் என்ற ரைட் சகோதரர்கள், ரேடியோ—மார்க்கோனி, ரேடியம்—கியூரி அம்மையார், அணுசக்தி—ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

மரபுவழி இலக்கியம் பற்றி விவாதம்

"ஒவ்வொரு மொழிக்கும் இனத்திற்கும் தனி மரபும், தனிப் பண்பும் உண்டு. இலக்கிய ஆசிரியன் இவற்றை மனதிற்கொண்டே தன் இலக்கியத்தைப் படைக்கவேண்டும். மரபுவழி ஆக்கப்பட்டவையே உயர்ந்த இலக்கியங்களாகும். இராமாயணத்தை வடமொழியிற் பாடினார் வான்மீகி முனிவர். கம்பன் அதையே தமிழிற் பாடினான். ஆனால் அவன் தமிழ் மரபை மறக்கவில்லை. தமிழனின் பண்பிற்கும் மரபிற்கும் ஏற்பவே கம்பன் தன் மகாகாவியத்தைப் பாடினான். மரபு வழிவந்த இலக்கியமே காலங்கடந்து வாழும் சக்தி பெற்றது. பச்சைத் தமிழிலும் கொச்சைத் தமிழிலும் எழுதப்படும் நாவல்களும், சிறுகதைகளும் இன்று நூற்றுக்கணக்கில் வெளியாகின்றன. அவை வெளிவந்த ஒருசில மணிநேரத்தில் அவை மறைந்து மடிந்துவிடுகின்றன. மரபுவழி தோன்றிய கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் இன்றும் எழிலுடன் இளமையும், இனிமையும் குன்றாது எமக்கு மகிழ்வூட்டுகின்றன" என யாழ். செங்குந்த

(5-ம் பக்கம் பார்க்க)

சாரணர் இயக்கம்

அநுராதபுரம், திங்கள்

இங்குள்ள விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவர் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அகில இலங்கைச் சாரண ஆணையாளர் திரு. கன்னங்கரா இவ்வியக்கத்தை அங்கீகரித்துள்ளார். தேசிய கூலி வாரத்தில் முதன் முறையாக ஈடுபட்ட இச்சாரணர் கோஷ்டி மிகுந்த சிரமத்துடன் நூற்றுக்கணக்கான ரூபாவைச் சேமித்துள்ளது. இச்சாரணர் இயக்கத்தின் ஆசிரியாரக வித்தியாலய உடற்பயிற்சி ஆசிரியர் திரு. இ. சுப்பிரமணியம் கடமையாற்றுகின்ருர்.

—

வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 16-6-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 வள்ளுவர் வாசகம், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 குரல் வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்ரகானம், 1-00 கதம்பம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 சித்ரகானம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஸ்ரீ லங்கா குறுக்கெழுத்துப் போட்டி, 7-00 விவேகச் சக்கரம், 7-30 திசை கடந்த இசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-15 நேயர் விருப்பம், 9-45 நாதஸ்வரம்—ஆர். கணேஷன்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Shirley Jones - Gig young
in
M. G. M's
A Ticklish Affair
(Panavision – Metrocolor)

மரதன் ஓட்டப் போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மெய்—வல்லுனர் விளையாட்டுக் கழகத்தாரால் நடாத்தப்படும் இரண்டாவது 26 மைல் மரதன் ஓட்டப்போட்டி இம்மாதம் 21-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இப்போட்டியில் பல சிறந்த வீரர்கள் இலங்கையின் இதர பாகங்களிலுமிருந்தும் பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

மரபுவழி . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்துக் கல்லூரிப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவர் மன்றத்தில் "உயர்ந்த இலக்கியம் மரபின் வழியே ஆக்கப்படவேண்டும்" என்ற தலைப்பில் நடைபெற்ற சொற்போரில் பேசிய செல்வி ந. திரவியம் குறிப்பிட்டார்.

செல்வன் க. பரராசசிங்கம் பேசுகையில், "கம்பராமாயணம் மரபின் வழி ஆக்கப்பட்ட இலக்கியம் என்ருல் சிலப்பதிகாரம் அந்த மரபிற்கு முரணுகவே ஆக்கப்பட்ட இலக்கியம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். ஆனல் கம்பராமாயணமும் உயர்ந்த இலக்கியம்தான், சிலப்பதிகாரமும் உயர்ந்த இலக்கியந்தான். மரபு காலத்திற்குக் காலம் மாறும் தன்மை வாய்ந்தது. காலத்தையும் சூழ்நிலையையும் அனுசரித்து,மரபை மாற்றவோ மீறவோ இலக்கிய ஆசிரியனுக்குச் சுதந்திரம் உண்டு" என்று கூறனுர்.

செல்வன் த. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இச் சொற்போரில் கல்லூரி மாணவர்களான ந. திரவியம், நா குழந்தைவேல், சி. குகதாசன் ஆகியோரும் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களான க. பரராசசிங்கம், இ. கோமளா தேவி, ந. கமலாதேவி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்கள் திரு. பொ. இராமசாமி, திரு. சி. சரவணபவன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) ஜுப்பிட்டர் (குருணகலை) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்

முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்

"விலைவாசி உயர்வு உடல் நலனைக் கெடுக்கிறது"

சுகாதாரவார விழாவில் பருத்தித்துறை எம். பி.

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் வட்டார மக்கள் சுகாதார விழா அல்வை முத்து மாரியம்மன் கோவில் வீதியில் கட்டைவேலி கிராம சபை உபதலைவர் திரு. எம். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது. விழா ஆரம்பமாவதற்கு முன்னர் சுகாதார சுலோக அட்டைகள் தாங்கிய மாணவர் சைக்கிள் ஊர்வலமொன்று மாவிசந்தி,வதிரி, திக்கம் ஊடாகச் சென்று விழாத்திடலை வந்தடைந்தது.

சிறிலங்கா வித்தியாசாலை மாணவர்களின் சுகாதார கீதத்துடன் விழா ஆரம்பமானது. அம்பிகா பாடசாலை அதிபர் திரு. க. கந்தப்பு தமது வரவேற்புரையில் முதன் முறையாக இப்பகுதியில் சுகாதார விழா கொண்டாடப்படுவதையிட்டுத் தாம் பெருமைப்படுவதாகவும் சைவாசாரப்படி வாழ்பவர்கள் நிச்சயம் சுகாதார முள்ளவர்களாக இருப்பார்களென்றும் கூறினர்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில், "விலைவாசி உயர்வும் பற்ருக்குறையுமே மக்களைப் பட்டினிபோட்டு அவர்களின்உடல் நலத்தைக் குறைத்து விடுகிறதென்றும் வாழ்க்கையோடு தொடர்புடைய சுகாதாரத்தை ஆண்டிற்கு ஒரு வாரத்திற்கு மாத்திரம் கொண்டாடிவிட்டால் போதாதென்றும் கூறினர்.

சாதாரண மனிதன் வாழக்கூடிய அளவுக்கு வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படவேண்டும். அரசாங்க ஆஸ்பத்திரிகளில் லஞ்ச ஊழலும் உயர்வு தாழ்வு மனப்பான்மையும் குடிகொண்டுள்ளன. என்று குறிப்பிட்ட திரு. துரைரத்தினம் மேலும் கூறியதாவது:

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வைத்தியத்தோடு சிங்களமும் கலந்திருக்கிறது. மருந்து அனுப்பும்படி சிங்களத்தில் கடிதமெழுதவில்லையென்ற காரணத்தால் எத்தனையோ ஆஸ்பத்திரிகள் முக்கிய மருந்து வகைகளின்றி மடங்கள்போலக் காட்சியளிக்கின்றன.

புகைத்தலும் குடியும் சுகாதாரத்திற்கு மிகக் கேடானவை. புகையிரதங்களில் மது வகைகள் விற்பதையும் பிரயாணிகள் (முக்கியமாக கொழும்பில் உத்தியோகம் பார்ப்பவர்கள் பீடி, சிகரெட் புகைப்பதையும் உடனடியாக நிறுத்தவேண்டும். பழமைகளைப் போக்கி புதுமையான வாழ்வு காண வேண்டும்.

இலங்கை மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவரும் 'கண்கள்' ஆசிரியருமான அல்வை சுகணு 'தாய்மையின் சுகம்' என்பது பற்றிப் பேசுகையில், "ரஷ்யாவிலே தாய்மார் கருத்தரிக்கும் போது அரசாங்கம் பொறுப்பெடுத்து உடல் நலத்தைப் பேணுகிறதென்றும் அதே முறையை எமது நாடும் பின்பற்றினல் வளமான புத்திரர்களைப் பெறமுடியும்" என்றும் குறிப்பிட்டார்.

இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. வ. ஆறுமுகம், சுகாதாரத்துறைத் தலைவர் திரு. சிங்கநாயகம், சுகாதாரத்துறை விரிவுரையாளர் திரு. எஸ். பொன்னம்பலம், திரு. மகேசன் ஆகியோரும் பேசினர்.

பாடசாலை மாணவர்களிடையே சம்பாஷணை, நடனம், நாடகம் முதலிய கலைப் போட்டிகள் நடைபெற்றன.

கச்சாய் கிராமசபை கேள்வி விளம்பரம்

சான்ரும்போக்கட்டி தெற்கு அரசினர் நன்கொடை ரோட்டு வேலைக்கான கேள்விப்பத்திரம் 2-7-64 வியாழக்கிழமை காலை 10 மணி வரை கச்சாய் கிராம சபைக் கந்தோரில் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

30-6-64 முற்பகல் 12-00 மணிக்கிடையில் ரூபா 75-00 கட்டிக் கேள்விப்பத்திரம் பெற வேண்டும். இக்கட்டுப்பணத்தில் கேள்விப்பத்திரப் பணமாகிய ரூபா 25-00 திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. முழு விபரங்களையும் கச்சாய் கிராம சபைக் கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்)
அ. த. சிதம்பரப்பிள்ளை
கச்சாய் கிராமசபைத் தலைவர்.

அலுவலகம்,
கச்சாய் கிராமசபை,
கொடிகாமம்.
15-6-1964 400

கிராமச்சங்கக் கட்டிட வேலைக்கு

கேள்விப்பத்திரம் (பளை)

மேற்கூறப்பட்ட கட்டிடக் கேள்விப்பத்திரங்கள் (Tenders) இம்மாதம் 17-6-64 தொடக்கம் 24-6-64 வரை கோரப்படுகிறது. இதற்காகிய மனுப்பத்திரம் பளை கிராமச்சங்கத்தின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

A. G. Rajasooriyar
கிராமச்சங்கத் தலைவர்,
புலோப்பளை, பளை.
16-6-64 601

மராமத்து இலாகாவுக்கொரு புதிய கமிட்டி

அமைக்க அமைச்சர் தீர்மானம்

கொழும்பு, செவ்வாய்

திடீர் பரிசோதனைகள், விசாரணை நடாத்துவதற்கும், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்கும், பொதுச் சேவைக் கமிஷனைப்போல அதிகார வரம்புள்ள ஒரு நிரந்தர கமிட்டியொன்றை நிறுவுவது பற்றி புதிய பொதுசேவை மந்திரி ஆராய்ந்துவருகிருர். கமிட்டியில் நிருவாகம், தொழில்நுட்பம் ஆகிய இரண்டு பிரிவிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்படடோர் அங்கத்துவம் வகிப்பர்

குற்றச்சாட்டுக்களின்பேரில் தற்காலிகமாகப் பதவிநீக்கம் செய்யப்பட்ட பலர்மீது பல வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை யென்றும் இதனல் அவர்களுக்கு அரசாங்கம் பகுதிச் சம்பளம் அளித்துவரும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும் துரித நடவடிக்கை எடுக்கப்படாதபடசத்தில் கமிஷன்களையும் கமிட்டிகளையும் நியமிப்பதில் எதுவித பயனும் இல்லையென்றும் அமைச்சர் குணவர்த்தன கூறியுள்ளார்.

மராமத்துப் பகுதிபற்றி 1960-ம் ஆண்டில் திரு. எச். ஏ. டி. சில்வா சமர்ப்பித்த அறிக்கையை அமுல்செய்யும்படியும் அமைச்சர் கோரியுள்ளார். தனதுஅதிகாரிகளை சில்வாவின் அறிக்கையைக் கவனமாகப் பரிசீலிக்கும்படியும் குற்றஞ்சாட்டப்பட்டோர் எவரும் தப்பிவிடாதபடி கவனிக்கும்படியும் திரு. குணவர்த்தன எச்சரித்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

அறிவித்தல்

எங்கள் கடையில் இருந்து காமதேனு கோப்பித் தூள் வியாபாரத்திற்கு போகும் மல்லாகம் க. சண்முகம் என்பவரை இன்றுடன் நிற்பாட்டி இருக்கிருேம். இதற்குப் பின்பு வரும் எந்தக்கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாம் பொறுப்பாளி இல்லை. ச. அருணசலம் பிள்ளை, 146, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 399

வரி விளம்பரம்

தேவை

இலங்கை வங்கிக்கு அல்லது மக்கள் வங்கிக்குப் போதிய சரியான ஆதன உறுதிப் பிணை கொடுத்து அரசாங்கத்திடம் நெல் எடுத்து கிழமைக்கு 2000 புசல் கோட்டா வேலை செய்யும் யாழ்ப்பாணம் - கண்டி ரோட் அருகாமையிலுள்ள மில்லுகளை கொமிஷனுக்கு அல்லது குத்தகைக்கு நடத்தக்கூடிய தகுதியுள்ளவர்கள் 20-6-64க்குள் மனுப்பண்ணவும். பொருளாதார முன்னணி மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 508

யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் கிராமத்திற்கு ஒரு ஆள் தேவை. 3 சதவீதம் கொமிஷன் கொடுக்கப்படும். ரூ. 100-00 கட்டுப் பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ், நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 461 493

கொக்குவில் இராஜா மில்லுக்கு அனுபவமுள்ள 4தொழிலாளர் தேவை. நேரில் சந்திக்கவும். 519

கரணவாய் தெற்கில் பெண் பிள்ளைகளுக்குத் தையல் வேலை பழக்குவதற்கு அனுபவம் உள்ள தையல் ஆசிரியை தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் 25-6-64 க்கு முன் நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்ளவும். தங்குவதற்கு இடவசதிகள் உண்டு. வே. இராஜலிங்கம், வீரப்பராயன், கரணவாய் தெற்கு, கரவெட்டி. 518

கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்

சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற்

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும்தணிக்கவல்ல விசேஷ பாம்,

தயாரிப்பாளர்கள்:
GABRIELS, Chunnakam. 273

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்று நிருபம் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

WANTED

Manager for a Rice Mill in Vavuniya District. Unqualfied typing knowledge preferred. Security Rs. 5000-00 earning 6% interest Starting Salary Rs. 200-00. Apply before 30-6-64 Theivasthan Corporation, C/o Eelanadu, Jaffna 520

‘நேரு வீதி என்று மாற்ற வேண்டாம்’

கொழும்பு, வெள்ளி

“செட்டியார் வீதியென்ற பெயரை நேரு வீதி என்று மாற்ற வேண்டாம். இது உங்கள் அரசியல் வாழ்வுக்குப் பெரியதொரு களங்கத்தை உண்டுபடுத்தக்கூடியது.”

இவ்வாறு அஹனுவரஜாதிக சமாஜ பெரமுனை கொழும்பு மேயர் திரு. வி. ஏ.சுகததாசாவுக்கு சமர்ப்பிக்கவிருக்கும் மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

விமலவன்சதேரோ, தம்பதெனியா எம் பி. ஆர். ஜி. சேனநாயக்கா,வெலிமடை எம். பி. கே. எம். பி. ராஜரத்தின ஆகியோர் இம்மகஜரை மேயரிடம் சமர்ப்பிப்பார்கள்.

தண்டாயுதபாணி கோவில்கும்பாபிஷேகம்

நல்லூர், செவ்வாய்

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் வருகிற திங்கட்கிழமை நடைபெற பெறவிருக்கின்றது.

கும்பாபிஷேகத்திற்கான கிரியைகள் வருகிற வியாழக்கிழமை மாலை ஆரம்பமாகின்றன. வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இக் கிரியைகள் தொடர்ந்து நடைபெறும்.

சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலிருந்து தண்டாயுபாணி சுவாமி மாவிட்டபுரத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொக்குவில் மஞ்சவனப்பதி கந்தசுவாமி கோவில், இணுவில் கந்தசுவாமி கோவில், சுன்னாகம் சிவன் கோவில், மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில், தெல்லிப்பழை அம்மன் கோவில் ஆகிய கோவில்களில் ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி தங்குவார்.

சுன்னாகத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

தமிழர் ஒருவரை தலைவராக்க முயற்சி

அக்கரைப்பற்று ஞாயிறு

அக்கரைப்பற்று மத்திய கிராம சபை. 6 முஸ்லிம்களையும், 4 தமிழர்களையும்கொண்ட ஒரு கிராமசபையாகும். இக் கிராமசபையின் தேர்தல் சமீபத்தில் முடிவமைந்தது. தலைவருக்கான தேர்தல் அடுத்தவார இறுதிப்பகுதியில் நடைபெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கிராமசபையில் 4 தமிழ் அங்கத்தினர் இருந்தபோதிலும் தலைவராக ஒருமுறை கூட இருக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இம்முறை போட்டியில்லாமல் ஒரு தமிழரைதலைவராக்க முஸ்லிம் அங்கத்தவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று நடந்ததினம் 4 தமிழ் உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து முடிவுசெய்துள்ளார்கள்-

---

அக்கரைப்பற்று ஞாயிறு

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாணமை, பொத்துவில், திருக்கோயில் அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை, நிந்தாவூர், காரைதீவு, சாய்ந்தமருது ஆகிய எட்டு கிராமசபைகளின் தேர்தல்கள் முடிவடைந்துள்ளது. தலைவருக்கான தேர்தல்கள் எல்லாம் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியடைந்துவிடுமென்று ஸ்தலஸ்தாபன அதிகாரி எதிர்பார்க்கிறார். ஜூலை மாத முதல்வாரத்தில் புதிய கிராமசபை கூடும்.

விற்பனைக்கு

வெட்போர்ட் வான் 33ஸ்ரீ5700 தொடர் 15 அந்தர் மரபொடி நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. நேரில் கலந்துகொள்ளவும். U. M. ஐதுரூஸ், 65, ஜின்னு ரோட், யாழ்ப்பாணம்; டெலிபோன் 7215. 522

வவுனியா கலை கைப்பணி விழா

வவுனியா, திங்கள்

வவுனியா மாவட்ட பிரதேச கலா மன்றத்தினர் அளிக்கும் கலைவிழாவும், கைப்பணிப் பொருட்காட்சியும் இம்மாதம் 26, 27, 28-ம் திகதிகளில் வவுனியா நகரசபை முன்றலில் கொண்டாடப் படவிருக்கிறது. இவ்விழாவில் கலைஞர்களும், கவிஞர்களும் பங்குபற்றுகிறார்கள். முள்ளியவளை இயல், இசை கலாமன்றத்தார் தயாரித்தளிக்கும் நாட்டுக்கூத்து நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளும், திறமைவாய்ந்த கலைஞர்களால் நாதஸ்வர,மேளவாத்திய கச்சேரிகளும், பல் கலைக்கழகத்தாரின் நொண்டி நாடகமும்,உலகப்புகழ் குணயா கோஷ்டியினரின் கண்டி நடனமும் இடம்பெறுமாம்.

எம் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியைக் காட்டும் நெசவுப்பொருட்கள், மட்பாண்டப்பொருட்கள்,பனை-தென்னை உற்பத்திப்பொருட்களும் காட்சிக்கு வைக்கப்படுகின்றன

இவ்விழாவை கலாச்சார சேவை அதிபர் திரு. பாலித்த வீரவன் திறந்துவைப்பார்.

கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டு விழா

நல்லூர், செவ்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது ஆண்டுவிழாவை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன’

இம்மாதம் 28-ம் திகதி முதல் ஒரு வார காலத்திற்கு ஆண்டுவிழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நாடெங்கிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன ஜூலை மாதம் 3-ம் திகதி கட்சியின் 21-வது தினத்தன்று இலங்கையின் முக்கிய பாகங்களில் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் உரைநிகழ்த்துவார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் பலத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கேற்றவகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

ஆண்டுவிழாவும் புத்தக வெளியீடும்

யாழ்ப்பாணம், செவ்.

பிராமண சமூக சேவா சங்க நிருவாகசபை கோட்டை முனை வீரகத்திப்பிள்ளையார் கோவிலிற் கூடிச் சங்கத்தின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தையும், புத்தகவெளியீட்டு விழாவொன்றினையும் ஜூலை மாதம் 12-ந் தேதி யாழ்ப்பாணம் கந்தர் மடம் விநாயகர் ஆலய மண்டபத்தில் நடாத்துவதெனத் தீர்மானித்தது. சிவஸ்ரீ இ. கு. பூர்ணனந்தேஸ்வரக் குருக்கள் எழுதிய ‘அக்கினிகாரியம்’ பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாத சர்மா எழுதிய ‘விநாயக மஹோற்சவ விளக்கம்’ அகிய நூல்களே வெளியிடப் படவிருக்கும் நூல்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடமாகாண ஆசிரிய கல்லூரிகள் யாவும் ஒன்றுகூடி ஜூலை மாத முற்பகுதியில் கொழும்புத்துறை ஆசிரிய கல்லூரியில் தமிழ் விழா ஒன்றினை நடாத்த முயற்சிகள்மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மூன்று தினங்களுக்கு நடக்கவிருக்கும் இவ்விழாவில் உரையரங்கும், கருத்தரங்கும், கவியரங்கும், கலையரங்கும் இடம்பெறுமெனவும் ஈழத்துப் பிரபல அறிஞர்பலர் இவ்விழாவிற் கலந்துகொள்வார் எனவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் நூதனசாலையில் வெள்ளைக்காகம் !

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பொருட்காட்சிச்சாலைக்கு அதிசய வெள்ளைக்காகமொன்று கிடைத்திருக்கிறது. இப்பறவைக்குக் காகம் போன்றே எல்லா உறுப்புகளும் அமைந்திருக்கின்றன. ஆனால் நிறம் மட்டும் வெள்ளையாக மாறுபட்டிருக்கிறது.

சங்கானையிலுள்ள பென்சனியர் திரு. எஸ். நாகமணி இவ்வெள்ளைக் காகத்தை சங்கானை காரியாதிகாரியின் அலுவலகத்தில் ஒப்படைத்தார். அங்கிருந்து யாழ்ப்பாணப் பொருட்காட்சிச்சாலையினர் தமது பொருள் சேகரிப்பாளர் மூலம் அக்காகத்தைப்பெற்றுக் கொண்டனர்.

வெள்ளைக் காகத்தைக் கண்டெடுத்த திரு. எஸ். நாகமணி கூறியதாவது: “எனது வீட்டுக் கிணற்றடியில் காகங்களின் தொந்தரவு தாங்க முடியாமல், அதிசயிக்கத்தக்க வெள்ளை நிறமுடைய காகமொன்று தஞ்சமென வந்து விழுந்தது. காகம் போலவே எல்லா உறுப்புகளும் இருந்தும், நிறம் மட்டும் வெள்ளையாக இருப்பதைக்கண்டு நாங்கள் வியப்படைந்தோம். பின் இந்த அதிசய பறவையை சங்கானை காரியாதிகாரியின் அலுவலகத்திற் கொடுத்தேன்”

ஏராளமானவர்கள் அதிசயமான இவ்வெள்ளைக்காகத்தை சென்று பார்த்து வருகிறார்கள்.

மீண்டும் ராணுவ தாக்குதல்!

சுழிபுரம், திங்கள்

திருவடிநிலையில் முகாமிட்டு இருக்கும் இராணுவத்தினர் அப பகுதியிலுள்ள கடலில் மீன்பிடிக்கச்செல்லும் மீன் பிடித் தொழிலாளர்களை தாக்கித் துன்புறுத்துவதாக புகார் செய்யப்பட்டுள்ளது. சுழிபுரத்தைச் சேர்ந்த மீன் பிடித் தொழிலாளர் வயிரமுத்து நடேசு,முருகர் நாராணபிள்ளை ஆகிய இருவரும் நேற்றுமுன்தினம் மீன் பிடித்துக்கொண்டு வீட்டுக்குவரும்போது இருவரையும் வழிமறித்து அவர்களுடைய மீனையும் பறித்து தாக்கியதாகக் கூறப்படுகிறது. தமிழ் கலவன் பாடசாலைக்கு அருகாமையில் இருக்கும் வைமன் தொட்டத்தில் உள்ள கிணற்றில் குளித்துக்கொண்டு நின்ற நாகர் ஆறுமுகம் என்பவரை அடித்து துன்புறுத்தினராம்.

சுழிபுரம் கிராமமுன்னேற்றச்சங்கம், சுழிபுரம் கிராம சபை, சங்கானைப் பொலிஸ் ஆகியவைகளிடம் இதுபற்றிப் புகார்செய்யப்பட்டுள்ளது.

அநுராதபுரம், திங்கள்

அநுராதபுரம் புனித நகர்ப் பகுதிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்ட ரோமன் கத்தோலிக்க தேவாலயம் இடித்து அழிக்கப் படவிருக்கிறது. திருச்சொரூபங்கள் அப்புறப்படுத்தப்பட்டு வெறுமையாகக் கைவிடப்பட்ட இத் தேவாலயத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கான கோரிக்கைகளை அநுராதபுரம் பாதுகாப்புச்சபை முகாமையாளர் கோரி விளம்பரஞ்செய்துள்ளார். தேவாலயத்தை ஆறு வாரங்களுக்குள் அழித்துப் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று நிபந்தனை விதிக்கப் பட்டுள்ளது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கலவன் பாடசாலையில் தமிழ்ப்பிள்ளைகளுக்குஇடமில்லை?

அனுராதபுரம், திங்கள்

சூரியகாப்பத்தனை அரசினர் சிங்கள தமிழ் கலவன் பாடசாலை வட்டார விளையாட்டுப் போட்டியிலும், மாவட்ட விளையாட்டுப்போட்டியிலும் பங்குபற்றி இரண்டிலும் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பாடசாலை மாவட்ட வெற்றிக்கேடயத்தை இரண்டாவது முறையாகக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் தமிழ்ப் பிரிவில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லையென்றும் இதனால் தமிழ்ப் பெற்றோர் பெருங்கவலையடைந்துள்ளனரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பெற்றோர் கட்டிட வசதிக் குறைவை நிவர்த்திப்பதற்காக எடுத்த முயற்சிகளும் பயனற்றுவிட்டதாம்.

இப்பாடசாலையின் சிங்களப் பிரிவில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் சேருவதற்கு இடமுண்டென்று தலைமையாசிரியர் கூறுவதாகத் தெரிகிறது. சிங்கள மாணவர்களைச் சேர்த்தும் வருகிறாராம்.

தமிழ் கலவன் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமானின் உதவியுடன் மேலதிகாரிகளுடன் தொடர்புகொள்வதெனத் தீர்மானித்துள்ளது.

சுகாதாரவார . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு விடுதிகள்

போசனசாலை: 1. மலாயா கபே, 2. சுபாஸ்கபே.

தேனீர்ச்சாலை: 1. சுபாஸ் கபே, 2. மலாயாகபே.

ஹோட்டல்: கிராண்ட் ஹோட்டல், 2 யால்டா ஹோட்டல்.

பேக்கரி: 1. கிறவுன்பேக்கரி, 2. சிட்டிபேக்கரி.

சோடா: 1. மச்சோடா, 2. சீதா.

ஐஸ்கிறீம்: 1. சுபாஸ்கபே, 2. டில்கா.

குழந்தைகளுக்கான பரிசில்கள்

1. திலகேந்திரன் இராமலிங்கம், 2. ஷாகுல்ஹமீது அப்துல்காதர், 3. ஸ்ரீகுமார் தம்பிஐயா.

பாடசாலைக்குச் செல்லாத சிறந்த சிறுவர்: 1. ஜீவா சுப்பிரமணியம், 2. ஜெரால்ட் ராஜ்குமார், 3.ஜீவதாசன் பஞ்சாட்சரம்.

மகாஜனா கல்லூரி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை உதைபந்தாட்ட சங்கம் வருடா வருடம் நடத்தும் அகில இலங்கை பாடசாலை உதைபந்தாட்டப் போட்டி தெல்லிப்பழை மகாஜனா கல்லூரிக்கும்-திரிகோணமலை சென். ஜோசப்ஸ் தமிழ் பாடசாலைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது. இதில் மகாஜனா கல்லூரி மாபெரும் வெற்றியை ஈட்டியது. இடைவேளையின் போது மகாஜனா கல்லூரி இரண்டு கோல்கள் அடித்தது. (2-0)

இடைவேளையின் பின் மகாஜனா கல்லூரி மூன்று கோல்களும், சென். ஜோசப்ஸ் பாடசாலை ஒரு கோலும் போட்டன. மகாஜனா கல்லூரி 5-1 கோல்களால் வெற்றியீட்டியது.மகாஜனாவைச் சேர்ந்த விநாயகமூர்த்தி, மகாலிங்கம், சத்தியானந்தம் ஆகியோரும், சென். ஜோசப்ஸ் பாடசாலையைச் சேர்ந்த ஜோர்ச் ஆகியோரும் திறமையாக விளையாடினார்கள். என். சோமசுந்தரம் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

நேருஜிக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

‘நேருஜி சமாதான தூதுவர். அவர் உலகில் சமாதானம் நிலைக்க, மனிதகுலம் அமைதியாக வாழ வழி வகுத்தவர் அவரது. நினைவுகளை நிறைவேற்றுவது மனித சமுதாய நல்வாழ்வுக்கு மிக்க அவசியம்’.

இவ்வாறு கொட்டடி இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்த நேருஜியின் அனுதாபக் கூட்டத்தில் பேசிய யாழ். மாநகர சபை அங்கத்தவர் திரு. கே. வி. தெய்வேந்திரன் குறிப்பிட்டார்.

திரு. செ. ஜெயபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில், நேருஜி தேச சகோதரத்துவ நெறி பெற்றி மக்களுக்கு அறிவுறுத்தினாரென்றும் பாரதநாட்டின் ஒருமைப்பாட்டுக்காகவும் உலகில ‘பஞ்சசீலம்’ வளரவும் உழைத்தாரென்றும் கூறினார்.

யாழ். மாநகரசபை அங்கத்தவர்கள் திரு. ஏ. துரைராஜசிங்கம், திரு. பீட்டர் சோமசுந்தரம், திருவாளர்கள் எஸ். சீவரத்தினம், கே. ராதாரமணன் ஆகியோரும் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

சனசமூக நிலையங்களின் உபவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச உபவிழா ஜூலை மாத முற்பகுதியில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. சமூகஜோதி இராசவாசல் முதலியார் தலைமையில் இவ்விழாவுக்கான ஏற்பாடுகள் சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் சமாசக் காரியதரிசி திரு. த. துரைசிங்கம், திரு. சண்முகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பின்வருவோர் உபவிழாச் சபைக் குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்: திரு. ஏபிரகாம்லிங்கன் தலைவர், திரு. ஆ. அமிர்தநாதர் காரியதரிசி, திரு. வ. துரைசாமி தனாதிகாரி, நிர்வாகசபையினர்: திருவாளர்கள் சு. கயிலாயபிள்ளை, யோ. சந்தியோகு, வ. கந்தையா, பா. ஞானசபாபதி, க.சிவலிங்கம்.

சிறுவர் கடத்தல் ஒருவர் கைது

அக்கரைப்பற்று, ஞாயிறு

பத்து வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட பள்ளிக்கூடச் சிறுவர்களை பாடசாலையில் இருந்து வீட்டுக்குச்செல்லும்போது கார்களில் தந்திரமாகக் கடத்திச்சென்று வேலை தேடித் தருவதாகச் சொல்லி ஒரு ஒதுக்கிடத்தில் வைத்திருந்து பின் அம்பாறைக்கு கொண்டுவந்து வீட்டு வேலைக்கு 100 ரூபா முதல்150 ரூபாவரை விற்றுப் பிழைக்கும் கூட்டமொன்று நடமாடுவதாக தெரியவருகிறது. இது சம்பந்தமாக பதுளை பொலிஸ் உயர்தர பொறுப்பு அதிகாரி திரு.டபிள்யு, ஏ.சமரவிக்கிரமா எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பேரில் ஒரு நபர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுள்ளார். அவரைக் கைது செய்யும்போது பெருந்தொகையான சிறுவர்களின் புகைப் படங்களும், அம்பாறையிலுள்ள பிரமுகர்களின் விலாசங்களும் இருந்ததாம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டுஜூன் மாதம் 16-ந் திகதிஅச்சிட்டுவெளியிடப்பட்டது.